**இலங்கை மஹாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகள் - 2021**

-----------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மஹாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமானசமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள்,ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும்வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள்,புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில்உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தி பிரகாரம் நியாயமான பெறுமதி கவனத்தில் கொள்ள வேண்டிய அளவு மாற்றம் மற்றும் துரிதமாக மாற்றமடையும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான | இவ் இரண்டு காணிக் கூறுகளின் தற்போதைய சந்தைப் பெறுமதியை மதிப்பிட அரச மதிப்பீட்டு திணைக்களத்திற்கு 2016 ஆண்டு | அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் 1984 - 1989 காலப் பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 64,320,853 கிரயமான 02 காணி கூறுகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அவற்றின் கிரயத்தையேனும் கணக்கீடு செய்யதிருக்கவில்லை. அவ்வாறே அதிகார சபையினால் தமது வலய அலுவலகம், பிரிவுகள், உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்றவை அமைந்துள்ள காணிகளையும் இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | வழங்கியுள்ளதுடன் அது தொடர்பாக நினைவூட்டிய போதும், இதுவரை குறித்த மதிப்பீட்டறிக்கை கிடைக்கவில்லை. அதிகார சபையின் வலய அலுவலகம், பிரிவுகள், உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்றவை அமைந்துள்ள காணிகள் அரச காணிகளாவதுடன் இதன் தனி உரிமை இலங்கை மஹவெலி அதிகார சபைக்கு உரித்தல்லாததுடன் அவற்றின் நிர்வாகம் மாத்திரம் அதிகார சபைக்கு உரியதால் இந்த சொத்துக்களை மதிப்பிட்டு நிதக்கூற்றுக்களில் காட்டவில்லை என அறிவிக்கிறேன். | |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்பித்த தகவல்கள் பிரகாரம் அணை பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்திலிருந்து, ரூபா 671,503,748 ஆன, மொறகஹகந்த கருத்திட்டத்தினால் ரூபா 430,418,733 ஆன காலநிலை பாதகமான பாதிப்பை குறைக்கும் கருத்திட்டத்திலிருந்து ரூபா 325,457,540 ஆன சொத்துக்கள் அதிகார சபைக்கு கிடைத்திருந்த போது மீளாய்வாண்டளவில் முறையே ரூபா 537,950,118 ஆன, ரூபா 225,822,896 ஆன மற்றும் ரூபா 186,391,238 ஆன சொத்துக்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. மேலும் மொறகஹகந்த கருத்திட்டத்திலிருந்து பெற்றுக் கொண்ட அறிக்கை பிரகாரம் அதிகார சபைக்கு ஒப்படைத்த சொத்துககளின் பெறுமதி ரூபா | கருத்திட்டத்தினால் வலய/பிரிவு அலுவகங்களுக்கு நேரடியாக சொத்துக்களை வழங்குதல் மற்றும் அவ்வாறு வழங்குகையில் ஒற்றை முறையொன்றை பின்பற்றாமை. கருத்திட்டத்தினால வலய/பிரிவு அலுவகங்களுக்கு நேரடியாக வழங்கியிருந்த சொத்துக்களை கணக்கீடு செய்ய தகவல்கள் 2021 ஆண்டிளேயே கண்டறியப்பட்டது. இவ்வாறு கணக்கீடு செய்ய சமர்பிக்கப்பட்ட சொத்துக்கள் | சொத்துக்களை உரிய முறையில் கையேற்று கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 586,015,546 ஆனது. அவ்வாறாயினும் இவ்வாறான வித்தியாசம் தொடர்பாக பரிசீலித்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிவேடுகளில் உள்ளடங்கிய பண்டங்கள், பௌதீக ரீதியாக இனங்காண முடியாததால் கணக்கீடு செய்யப்படாமை. எவ்வாறாயினும் கருத்திட்டத்தினால் வழங்கிய சொத்துக்களின் சரியான தகவல்களை கண்டறிந்து அத் தகவல்களை கணனிப்படுத்தும் நடவடிக்கை தற்போது இடம்பெறுவதுடன் அத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2022 ஆண்டு கணக்குகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | |
| (ஆ) | எம்பிலிபிடிய வலயத்தில் வர்த்த காணிகளை குத்தகை வழங்கும் வருமானமான ரூபா 2,688,000 இனை வருமானமாக குறிப்பிடாது வியாபார கடன்கொடுனராக காட்டியதால் ஆண்டின் வருமானம் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் ஜர்னல் குறிப்பு மூலம் சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | வருமானங்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | முறவெசிஹேன உத்தேச அலுவலகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்ததம் தொடர்பாக ரூபா 478,496 ஆன வெட் மற்றும் ரூபா 1,446,980 ஆன மூலப்பொருள் முற்பணத்தை அக்கணக்குகளிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக கூட்டுப் பெறுமதி ரூபா 1,925,476 இனை நடைமுறை வேலைக் கணக்கிற்கு வரவு வைத்த காரணத்தால் நடைமுறை வேலைகள் ரூபா 1,925,476 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | முறவெசிஹேன அலுவலகத்தை புனரமைப்பு பெறுமதி ரூபா 7,314,810.80 ஆனதுடன் அதனை ரூபா 9,240,287 ஆக ‘‘நடைமுறை வேலை’’ கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா 1,925,476 ஆன தொகையை ஜர்னல் குறிப்பின் மூலம் சீராக்கப்பட்டுள்ளது. | சரியான கணக்கு குறிப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மொறகஹகந்த கருத்திட்டத்தின் கணக்குகளின் பிரகாரம் கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் பெறுமதி முறையே ரூபா 108,452,464 மற்றும் ரூபா 907,550 ஆன போதும் அதிகார சபையின் கணக்குகளில் அப் பெறுமதிகள் முறையே ரூபா 11,645,087 மற்றும் ரூபா 38,388,969,995 ஆன | மொறகஹகந்த கருத்திட்டத்தின் மூலம் கடன்படுனர் மீதி ரூபா 108,452,464 ஆக உறுதி செய்த போதும் அம் மீதியினுள் 2021 திசெம்பர் 31 திகதிக்கு பிரதான அலுவலகத்தின் | கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் மீதிகளை இணக்கி வித்தியாசம் காணப்படுமாயின் பரிசோதித்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் முறையே கடன்படுனர் மீதி ரூபா 10,737,537 மற்றும் கடன்கொடுனர் மீதி ரூபா 38,280,517,531 குறைத்தும் நிதக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதும் இம் மாற்றங்கள் தொடர்பாக பரிசீலித்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன்படுனர் மீதியான ரூபா 38,564,344,510 தொகை உள்ளடக்கப்படவில்லை. மொறகஹகந்த கருத்திட்டத்தின் நடைமுறை கணக்கு மற்றும் அதிகார சபையின் நடைமுறை கணக்கிற்கு இடையில் வித்தியாசத்திற்கு காரணமாக அமைந்தது கருத்திட்டத்தினால் வலய/பிரிவு அலுவலகங்களிற்கு சொத்துக்களை பௌதீக ரீதியாக வழங்குகையில் அச் சொத்துக்களிற்கு உரிய வலய/ பிரிவு நடைமுறைக் கணக்கினூடாக பரிமாற்றப்படாது பிரதான அலுவலக நடைமுறை கணக்கினூடாக மாத்திரம் பரிமாற்றியமையாகும். கடன்படுனர் மீதி வித்தியாசத்தில் ரூபா 690,000 உம் கடன்கொடுனர் மீதியில் ரூபா 27,545,052 ஆன பெறுமதியையும் இனங்கண்டு சரிசெய்யப்பட்டுள்ளன. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.5.3 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2015 - 2018 காலப்பகுதியில் ரூபா 80,000,000 செலவில் வெலிக்கந்த மற்றும் வெலிஓயா வலயங்களில் நிர்மாணக்கப்பட்ட 30 நீர் சுத்திகரிப்பு இயந்திர கூடங்கள் 2020 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி செலவாக பதிவலிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அவற்றின் இயக்க நடவடிக்கைகள் உடன்படிக்கை மூலம் குறித்த கமநல சங்கத்திற்கு | கமநல சங்கம் 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் மூலம் சட்டரீதியாக்கப்பட்ட இலங்கை மஹவெலி அதிகார சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களினுள் வலுவூட்டப்பட்ட சட்டரீதியான நிறுவனமொன்றாகும். அதனால் இலங்கை மஹவெலி அதிகார சபையின் அதிகாரிகள் மஹவெலி ஆளுகை | மூலதன செலவினங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதேசங்களில் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் கமநல சங்கங்களுடன் இணைந்து அந் நடவடிக்கைகளை மேற்கொள்வது பொதுவான நடைமுறையாகும். மேற்படி பொறிமுறையை மஹவெலி ‘‘பீ’’ மற்றும் ‘‘எல்’’ வலயங்களில் நிறுவுகையில் கமநல சங்கங்களின் உதவியை பெற்றுக் கொள்ளல் செய்யப்படுகின்றது. | |

### 1.5.4 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் கட்டுப்பாடு மற்றும் பராமரிப்பு செய்யப்படும் 6 வலயங்களில் 9,237.9 கிலோ மீட்டர் நீளமான கால்வாயை ரூபா 74,989 மில்லியனிற்கு மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில காட்டியிருந்த போதும் அக் கால்வாய் கருத்திட்டத்தை தகைமையுடைய ஏற்றுக் கொண்ட மதிப்பீட்டாளரினால் அல்லது மதிப்பீட்டு சபையொன்றினால் மதிப்பிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக அம் மதிப்பீட்டு பெறுமதியை கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | பிரான அணை, நீர்த்தேகம், குளம், பாதைகள் மற்றும் குறித்த கால்வாய்களின் பெறுமதியை மதிப்பிட பயன்படுத்திய பிரமாணங்களாக சிறிய, மத்திய மற்றும் பாரிய குளங்களை நிர்மாணிக்க பயன்படுத்திய மூலப்பொருட்களின் அளவை நிலவும் அலகு விலையால் பெருக்கல், பாதைகள், பிரதான கிளை பிரிப்புக்கள் மற்றும் வயல் வாய்கால்கள் 01 கிலோ மீட்டர் நிர்மாணிக்க பயன்படுத்திய மூலப்பொருட்களின் அளவை நிலவும் அலகு விலையால் பெருக்கல் பயன்படுத்தப்பட்டன. | சொத்துக்கள் கருத்திட்டங்களை தகைமையுடைய மதிப்பீட்டாளர் அல்லது மதிப்பீட்டுக் குழுவொன்றின் மூலம் மதிப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் ஆளுகையின் கீழ் நிலவும் சொத்தாக 463 குளங்கள் மற்றும் 11 அணைகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருந்த போதும் அக் குளங்கள் மற்றும் அணைகளின் உரிமை மஹவெலி அதிகார சபைக்கு | மஹவெலி அதிகார சபையினால் பராமரிக்கப்படும் பிரதான் 11 அணைகள் மற்றும் 463 குளங்களை பௌதீக ரீதியாக இனங்கண்டு ஒன்றிணைந்த | சொத்துக்கள் அதிகார சபைக்கு சொந்தம் என உறுதி செய்து கொண்டு மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரித்தானது என உறுதி செய்ய குறித்த ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. அவ்வாறே அச் சொத்துக்கள் அதிகார சபைக்கு உரித்தாவதாக உறுதி செய்து கொண்டு மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் காட்டியிருந்த போதும் நாட்டினுள் நிலவிய கொரோனா தொற்று நிலைமையின் மீது அச் சொத்துக்களை மதிப்பிட்டுக் கொள்ள முடியாது போனதுடன் 2022 ஆண்டில் அச் சொத்துக்களை முறையாக மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.5 ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹவெலி மதியுரை சேவை செயலணி (தனி) கம்பனி 2020 திசெம்பர் 30 திகதி முதல் நீர்பாசன அமைச்சின் கீழ் ஒப்படைத்துள்ள காரணத்தால் 2021 ஆண்டுகளில் குறித்த ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் ஊடாக அக் கம்பனியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விடுபட்டிருந்தன. எவ்வாறாயினும் இவ் ஒப்படைப்பிற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட கணக்கு செம்மையாக்கல் விபரம் கணக்காய்விற்கு சமர்பிக்காத காரணத்தால் குறித்த ஒப்படைப்பு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கும் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | 2022 நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | ஒப்படைப்புக்குரிய கணக்கு செம்மையாக்கல் விபரங்களை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |
| (ஆ) | அதிகார சபைக்கு சொந்தமான இரண்டு துணை கம்பனிகளான மஹவெலி வென்சர் கெபிடல் (தனி) கம்பனி 2012 ஆண்டிலும், இயற்கை வள முகாமைத்துவ கம்பனி 2019 ஆண்டிலும் கலைக்க தீர்மானித்திருந்த போதும், மீளாய்வாண்டிலும் கலக்கும் நடவடிக்கையை முடிவுறுத்தி இருக்கவில்லை. | மஹவெலி வென்சர் கெபிடல் (தனி) கம்பனி மற்றும் இயற்கை வள முகாமைத்துவ (தனி) கம்பனி ஆகிய துணைக் கம்பனிகளை கலைத்தல் தொடர்பான முன்நடவடிக்கை பொது திறைசேரி ஊடாக நிறைவேற்றி தருமாறு கோரி (2021 மார்ச் 15 திகதி நீர்பாசன அமைச்சின் செயலாளர் | கலைக்க தீர்மானித்துள்ள கம்பனிகளை விரைவில் கலைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஊடாக) கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பொது திறைசேரியின் சட்ட நடவடிக்கை திணைக்களத்தின் மேலதி பணிப்பாளர் நாயகத்தின் 2021 திசெம்பர் 23 திகதிய கடிதம் பிரகாரம் தற்போது கலைப்பாளரை பெயரிட்டு அச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (இ) | கருத்திட்ட குழுவினால் தெரிவு செய்த வெளி முதலீட்டாளர் ஒருவருடன் மஹவெலி கால்நடை வள மற்றும் விவாசய வியாபார (தனி) கம்பனி அரச தனியார் ஒற்றிணைந்த கம்பனியாக மறுசீரமைக்க 2018 செப்டம்பர் 18 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் கம்பனியினால் முகாமை செய்யும் சீ வலய கிராந்துருகோட்டே மற்றும் பீ வலய தம்மின்ன பண்ணைக்கு சொந்தமான 1,154 ஏக்கர் விசாளமான நிலத்தை அனைத்து சொத்துக்கள் உள்ளடங்களாக அரச தனியார் பங்கு உரித்தான ஒன்றிணைந்த வியாபாரமொன்றாக செயற்படுத்த விருப்பத்தை கோர 2022 பெப்ரவரி 28 திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றிருந்தது. அமைச்சரமை அங்கீகாரம் கிடைத்து மூன்றாண்டு காலம் கடந்திருந்த போதும் அதற்குரிய நடவடிக்கைகளை முடிவுறுத்தியிருக்கவில்லை. | இலங்கைமஹவெலி அதிகார சபைக்கு சொந்தமான மஹவெலி கால்நடை வள மற்றும் விவாசய வியாபார (தனி) கம்பனியினால் முகாமைத்துவம் செய்யப்படும் சீ வலய கிராந்துருகோட்டே மற்றும் பீ வலய தம்மின்ன பண்ணைக்கு சொந்தமான 1,154 ஏக்கர் விசாளமான நிலத்தை அனைத்து சொத்துக்கள் உள்ளடங்களாக அரச - தனியார் பங்கு உரித்தான ஒன்றிணைந்த வியாபாரமொன்றாக செயற்படுத்த முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்ய விருப்பம் கோர அமப/21/2229/317/025-1 மற்றும் 2022 சனவரி 25 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2022 பெப்ரவரி 01 திகதிய எனது குறிப்பின் பிரகாரம் பத்திரிகை அறிவித்தல் மூலம் முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்ய பணப்பாளர் சபை அங்கீகாரத்தை 2022 பெப்ரவரி 28 திகதி பெறப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம், பத்திரிகை அறிவித்தலை தயாரித்து தினமின, தினகரன், டேலிநிவுஸ் | அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பத்திரிகைகளில் பிரசுரிக்க தேவையான முறையான பெறுகைகள் நடைமுறையை தற்போது பின்பற்றிக் கொண்டு இருப்பதுடன், அதற்கான கோரிக்கை நீர்பாசன அமைச்சின் செயலாளரிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன்படுனர் கடன்கொடுனர் காலப்பகுப்பாய்வு பிரகாரம் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 242,525,000 ஆன கடன்படனர் மீதியொன்றும், ரூபா 85,844,000 ஆன கடன்கொடுனர் மீதியொன்றும் நிலவிய போதும், அம் மீதிகளை தீர்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க குறித்துக்கொன்டேன் | கடன்படுனர் கடன்கொடுனர் மீதிகளை தீர்ப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் இலக்கம் 1646 | வாகனங்களில் தின ஓட்டக்குறிப்பு உரிய மாதத்தின் பின்னர் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டிய போதும், அதிகார சபையின் பிரதான அலுவலகத்தின் 57 வாகனங்களின் தின ஓட்டக்குறிப்பை 2021 நவம்பர் 26 திகதி கணக்காய்வினால் கோரிய போதும் அறிக்கை திகதி வரையும் கணக்காய்விற்கு சமர்பிக்கவில்லை. | எதிர்காலத்தில் ஐயவினாவின் மூலம் குறிப்பிட்டுள்ள ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க மற்றும் கோரியுள்ள தின ஓட்டக் குறிப்பை சமர்பிக்கவும் நடவடிக்கை எடுக்கிறேன். | தின ஓட்டக் குறிப்பை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1985 மே 10 திகதிய இலக்கம் 289 கொண்ட மற்றும் 1992 ஆகஸ்ட் 19 திகதிய இலக்கம் 26/92 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை | அரசின் அனைத்து வாகனங்களினதும் அரச இலட்சினையை மற்றும் நிறுவனத்தின் பெயரை குறிப்பிட வேண்டிய போதும் அதிகார சபை எவ்வித வாகனம் தொடர்பாகவும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரச இலட்சினையை மற்றும் அதிகார சபையின் பெயரை அதிகார சபையின் அனைத்து வாகனங்களிலும் குறிப்பிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க குறித்துக் கொண்டேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயரை குறிப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நியதிச் சட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2022 பெப்ரவரி 25 திகதி உரிய தகவல்களுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அக் காலப்பகுதியினுள் நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக (கொவிட் தொற்று நிலைமை) வலய/பிரிவுகளிலிருந்து வரைவு வருடாந்த அறிக்கையின் உள்ளடங்க வேண்டிய தகவல்களை வளங்குகையில் காலதாமதம் ஏற்பட்டதால் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கையை உரிய திகதிக்கு சமர்பிக்க முடியாதுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 திகதிய இலக்கம் 1/2015 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) 3.1 பிரிவு | உத்தியோக வாகனம் உரித்தான எச்எம் 1-1 வகையின் கீழான பணிப்பாளர்களுக்கு அங்கீகார மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 120 லீட்டர் ஆன போதும் | விடுதி வியாபார முகாமையாளரை எடுத்தால் மேலதிக அரசாங்க அதிபராக கடமை மேற்கொள்ள சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு எடுத்தால் இவ் | சுற்றறிக்கை நியமங்களுக்கு இணங்க மேற்படி கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கு மாற்றமாக 140 லீட்டர்கள் கொடுப்னவு செய்ததால் 2018,2019,2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பிரதான அலுவலகத்தினால் ரூபா 1,173,213 கூடுதலான தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அலுவலர் பிரதான இயக்க அலுவலராக கடமை மேற்கொள்வதாலும் அனைத்து வலயங்களினதும் அந்த அந்த விடயங்களிலான காரணங்கள் அந்த அந்த விடயங்களிலான பணிப்பாளர்களினூடாக இடம்பெறுவதால் இவ் அலுவலர்கள் மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிட்ட ‘‘பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர்’’ இன் கடமைப் பொறுப்புக்ளை மேற்கொள்வதால் இலங்கை மஹவெலி அதிகார சபையின் அனைத்து விடுதி முகாமையாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தராக கணித்து 2015/01 பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடுவதன் பிரகாரம் எரிபொருள் 140 லீட்டர் வீதம் வழங்கப்பட்டுள்ளது. | வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்திய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 3.2 பிரிவு | கடமை நடவடிக்கையை மேற்கொள்வதற்காக மாதாந்த எரிபொருள் போதியல்லாத விஷேட சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொண்ட உண்மையான எரிபொருள் செலவை மீள்நிரப்ப முடியுமான போதும், சேவை நிலையத்திற்கு வெளியில் கடமைக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரமின்றி உத்தியோகபூர்வ வாகனத்திற்காக மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் | இலங்கை மஹவெலி அதிகார சபையின் 37 ஆவது நிறைவேற்று முகாமைத்துவ குழுக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 2015/01 பிரகாரம் மேலதிகமாக பெற்றுக்கொள்ளும் எரிபொருளிற்காக கொடுப்பனவு செய்ய பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பிரதி பணிப்பாளர் (போக்குவரத்து) | சுற்றறிக்கை நியமங்களின் பிரகாரம் மேற்படி கொடுப்பனவை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரதான அலுவலக உத்தியோகபூர்வ வாகன உரித்தான அலுவலர்களுக்கு அங்கீகாரமின்றி ரூபா 1,657,505 ஆன மேலதிக எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அறிவூட்டப்பட்டுள்ளார். | |
| | (iii)3.6 பிரிவு | உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தான உத்தியோகத்திர்களுக்கு சேவை நிலையத்திலிருந்து 40 கிலோமீட்டர் விஞ்சிய தூரம் விஷேட கடமைகளுக்காக குழுவாக சமூகமலிக்க குழு போக்கவரத்து வசதிகள் வழங்க முடியுமான பொதும் அதிகார சபையினால் அவ்வாறான முறைமையொன்றை பின்பற்றியிருக்கவில்லை. | அதிகாரசபையினுள் பல பிரிவுகள் உள்ளன. அப் பிரிவுகளில் உத்தியோகத்தர்களுக்காக குழு போக்கவரத்து வசதிகள் முடியமான அளவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்துள்ளது. ஒவ்வொரு பிரிவுகளிலும் பல கள கடமைகளின் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வாகன எண்ணிக்கையை முகாமை செய்து குழு போக்கவரத்து வசதிகள் வழங்கப்பட்ட போதும் அது தொடர்பாக நடைமுறை பிரச்சினை ஏற்பட்டுள்ளது. | சுற்றறிக்கை நியமங்கள் பிரகாரம் குழு போக்குவரத்து வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2015 ஜுலை 10 திகதிய இலக்கம் 02/2015 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவு | ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு முறை வாகன பராதீன நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய போதும் அதிகார சபையினால் 2016 ஆண்டின் பின்னர் வாகன பராதீனமொன்றை செய்திருக்கவில்லை. | பராதீனம் செய்ய பரிந்துரைக்கப்பட்ட வாகனங்கள் அடிப்படையாக வலய/பிரிவு மட்டத்தில் இனங்கண்டதன் பின்னர் மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மோடார் வாகன பரிசோதகர் உள்ளடங்கிய உள்ளக குழுவொன்றினால் அனைத்து வலய/பிரிவுகளில் களத்திற்கு சென்று பௌதீகமான பரிசோதித்து பெற்ற மதிப்பீட்டு அறிக்கைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று | சுற்றறிக்கை நியமங்கள் பிரகாரம் வாகன பராதீனத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 2016 நவம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| | (i) 3.1 பிரிவு | அரச வாகனங்களிற்கு ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத காலத்தின் பின்னர் அல்லது 25,000 கி.மீ தூர ஓட்டத்தின் பின்னர் அல்லது என்ஜினுடன் தொடர்பான பிரதான திருத்த வேலைகளின் பின்னரேனும் போன்ற காரணங்களினுள் முதலில் நிகழும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை செய்ய வேண்டிய போதும் அதிகார சபையினால் தமது வாகனங்கள் தொடர்பாக அவ்வாறான எரிபொருள் பரிசோதனைகளை மேற்கொண்டிருக்கவில்லை. | எனது இலக்கம் MASL/HO/TR/ADM/106 மற்றும் 2022 பெப்ரவரி 09 திகதிய கடிதம் மூலம் எரிபொருள் பாவனை தொடர்பாக பரிசோதனை ஒன்றை மேற்கொள்ளுமாறு பிரதான அலுவலகம் உட்பட அனைத்து வலய மற்றும் பிரிவுகளும் அறவூட்டப்பட்டன. | சுற்றறிக்கை நியமங்கள் பிரகாரம் வாகன எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | (ii) 4.2 மற்றும் 4.3 பிரிவுகள் | வாகனங்களின் வெளி திருத்தங்களிற்காக விலை மனு கோர வேண்டிய போதும் உள்ளக திருத்த வேலைகளுக்கு அவ்வாறு செய்யற்பட இயலுமை இல்லாததால் பகுதிகளை கலற்றிய கராஜின் விலைகளை ஏற்க வேண்டி இருப்பதனால் அவ்விலைகள் தொடர்பாக அரச துறை திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் | கடமை நடவடிக்கை ஒன்றிற்கிடையில் இடம் பெறும் இடரின் போது காணப்படும் நிலைமையின் மீது ஏற்பட்டுள்ள திருத்தங்களை உரிய முறையில் பழுதுபார்த்து அதற்காக தழுவு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அனைத்து வாகன பழுதுபார்த்தல்களும் நிறுவனத்தில் காணப்படும் பெறுகைகள் நடைமுறையிற்கு இணங்க மேற்கொள்ளப்படுவதுடன் | சுற்றறிக்கை நியமங்கள் பிரகாரம் வாகன பழுதுபார்த்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அல்லது சபையொன்றின் தகைமையுடைய இயந்திர பொறியியலாளரின் அறிக்கையை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அதிகார சபையினால் அவ்வாறான நடைமுறையொன்றை பின்பற்றியிருக்கவில்லை | இயந்திர பொறியியலாளரின் அவதானிப்பு உள்ளிட்ட அறிக்கையொன்றை அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன். | |
| (எ) | 2020 ஒக்டோபர் 02 திகதிய இலக்கம் 05/2020 கொண்ட நிதி அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(அ) பிரிவு | ஓட்ட நிலையில் இல்லாத வாகனங்களை<br><br>2020 திசெம்பர் 31 திகதிக்கு பராதீனம் செய்ய வேண்டிய போதும் பராதீனம் செய்ய வேண்டுமென இனங்கண்டிருந்த 120 வாகனங்களை 2022 ஏப்ரல் 27 கணக்காய்வு திகதி வரை பராதீனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2015 ஜுலை 10 திகதிய இலக்கம் 02/2015 கொண்ட அரச நிறுவனங்களில் பழுதடைந்த வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றல் எனும் அரச நிதி சுற்றறிக்கையின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை நியமங்கள்<br><br>பிரகாரம் வாகன பராதீனத்தை மேற்கொள்ள வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2002 ஆண்டில் கடன் வழங்க சுழற்சி நிதியமொன்றை ஏற்படுத்த ரூபா 48 மில்லியனை பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்துள்ள போதும் 2010 ஆண்டின் பின்னர் அக் கடன் நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்தாது 4 சதவீத குறைந்த வட்டி விகிதமொன்றின் கீழ் வங்கியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 திகதியில் வட்டியுடன் அந் நிதியம் ரூபா 93,783,845 ஆனதுடன், 2021 ஏப்ரல் மாதம் அதில் ரூபா 81,162,538 ஆன தொகையொன்றை அறவிட்டிருந்ததுடன், ரூபா 12,621,307 ஆன தொகையொன்றை மற்றும் அதற்குரிய வட்டியை மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | இவ் வைப்பு தொகையை விரைவில் இலங்கை மஹவெலி அதிகார சபைக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து தலைவர், பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அறவித்துள்ளது. அவ் அறிவித்தலின் விளைவாக அதிகார சபைக்கு விடுவித்த போதும் மேலும நிலுவை தொகையை விரைவில் தீர்க்குமாறு பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத் தொகையை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டது. | மேலும் அறவிட வேண்டியதாகவுள்ள தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 665,334,000 ஆன இலாபமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 588,403,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,253,737,000 ஆன வளரச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு அரசிறை வருமானம் அதிகரித்தமை, பண்ணை விற்பனை மற்றும் ஏனைய வருமானங்கள் அதிகரித்தமை மற்றும் அரச மூலதன மற்றும் மீண்டுவரும் ஏற்பாட்டு கிடைப்பனவு அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்பாசன சௌபாக்கியம் வேலைத் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டினுள் குளக்கட்டு மற்றும் கமநல கால்வாய்களை திருத்தும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் முக்கியத்துவ அடிப்படையில் 37 குளங்களை புனரமைக்க 66 குளங்களின் கட்டணம் அறவிட்டு வண்டல் மண்ணை அகற்ற திட்டமிடப்பட்டிருந்தது. குளத் தொகுதிகளை பாதுகாக்கவெனின் இவ் வேலைத்திட்டத்தின் ஊடாக கருத்திட்டங்களை செயற்படுத்துகையில் தனித் தனியாக குளங்களை தெரிவு செய்யாது எல்லாங்க தொகுதியாக தெரிவு செய்து அவற்றின் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது நிபுணர்களின் கருத்தான போதும், ஈ மற்றும் பீ வலயங்களிற்கு உரிய 11 குளங்களை எல்லாங்க தொகுதிகளிற்கு உரித்தான போதும் அக் குளங்களை புனரமைக்க தெரிவு செய்யப்படவில்லை. மீளாய்வாண்டு இறுதியில் புனரமைக்க தெரிவு செய்த 18 குளங்களின் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் கட்டணம் அறவிட்டு வண்டல் மண் அகற்றிய குளங்களின் எண்ணிக்கை 05 ஆனது. அவ்வாறே வண்டல் மண்ணை அகற்றுவதனூடாக ரூபா 598.7 மி வருமானத்தை ஈட்டிக் கொள்ள எதிர்பார்த்த போதும், ரூபா 9.45 மில்லியன் மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. | பீ வலய 11 குளங்களில் மற்றும் ஈ வலய 12 குளங்களினதும் புனரமைப்பு வேலைகள் நீர்பாசன சௌபாக்கியம் வேலைத் திட்டத்தின் கீழ் 2021 ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டதுடன், முறையே 71 சதவீத மற்றும் 68 சதவீத பௌதீக முன்னேற்றமொன்றை 2021 ஆண்டில் அடைந்திருந்தது. நாட்டினுள் நிலவிய கொவிட் தொற்று காரணமாக வண்டல் மண்ணை அகற்றும் நடவடிக்கைக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள அதிக காலம் கடந்ததானால் இவ் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அமைந்து கொள்ள முடியவில்லை. மேலும் குளங்களின் கீழ் உள்ள வயலகளிற்கு நீர் வழங்க பாதிப்பு ஏற்படாதவாறு வண்டல் மண்ணை அகற்றும் வேலைகளை மேற்கொள்ள வேண்டியதால், எதிர்பார்த்த நிதி முன்னேற்றத்தையோ | வேலைத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பௌதீக முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்தன. | |
| (ஆ) | இலங்கையின் மொத்த நிலஅளவின் 1/3 பங்களவு மஹவெலி ஆளுகைக்குட்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அப் பிரதேசத்திற்கு சொந்தமான அரச காணிகளை முகாமைத்துவத்தை அதிகார சபை மேற்கொள்வதுடன் அதனை மிக்க வினைத்திறனாக்குவனூட குடியிருப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களிற்கு உயர்ந்த சேவையை வழங்கும் நோக்கில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தை காணி முகாமைத்துவத்திற்கு அறிமுகப்படுத்த அதிகார சபையினால் 2016 மற்றும் 2018 ஆண்டுகளில் ரூபா 6,973,405 ஆன தொகையை 03 தனியார் நிறுவனங்களுக்கு மூன்று செலுத்தியிருந்ததுடன், தொகுதியை செயற்படுத்த 60 அலுவலர்களை பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. எனினும் தற்போதும் காணி தகவல் முகாமைத்துவ தொகுதி செயற்படாததால் அச் செலவு விளைவற்ற செலவாக இருந்தது. | அரச காணி முகாமைத்துவத் தொகுதி (E-Slims) அபிவிருத்தி, இயக்க மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கு தனியார் நிறுவனமொன்றுடன் சேவை உடன்படிக்கை ஒன்றிற்கு கைச்சாத்திடப்பட்டிருந்தது. 23,210 காணிக் கூறுகளின் தகவல்களை உள்ளிட அடிப்படை படிமுறையாக ஆரம்பிக்கப்பட்டது. நீண்ட கால குத்தகை/ வருடாந்த அனுமதிப்பத்திரம்/ஒப்படை பத்திரம்/ அனுமதிப்பத்திரம் 5,416 இற்குரிய அடிப்படை தகவல்களை தொகுதிக்கு உள்ளிட தற்போது ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் நிலவும நிதி நிலைமையின் கீழ் இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நிதி ஏற்பாடு போதியதாக இல்லை என அறிவிக்கிறேன். | காணி தகவல் முகாமைத்துவ தொகுதியொன்றை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் அதிகார சபையினால் முதலீட்டு கருத்திட்டங்களிற்கு 695 முதலீட்டாளர்களுக்கு 6,879 ஹெக்டேயர் மொத்த காணியளவு வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் முழுமையாக அபிவிருத்தி செய்துள்ள காணி கூறுகளின் அளவு 3,284 ஹெக்டேயர் ஆனதுடன், குறை அபிவிருத்தி செய்துள்ள காணி கூறுகளின் அளவு 2,023 ஹெக்டேயர் உம், அபிவிருத்தி செய்யப்படாத காணி கூறுகளின் அளவு 1,572 ஹெக்டேயர்களாக காணப்பட்டன. இதன் பிரகாரம் வழங்கிய காணி அளவுகளில் 52 சதவீதம் குறை அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி | கூடுதலான முதலீட்டு கருத்திட்ட எண்ணிக்கை காணப்படும் மஹவெலி பீ வலயத்தில் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக ஒதுக்கியுள்ள அளவில் 1,285 ஹெக்டேயர்களான 128 காணி கூறுகளை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. ஏனைய இரத்துச் செய்துள்ள காணிகளிற்காக முறையான முதலீட்டாளர்களின் சாத்தியப்பாட்டை பரிசோதித்து | காணி வழங்கலின் நோக்கத்தை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் காணி அபிவிருத்தி செய்வது தொடர்பாக பின்னூட்டல் செய்ய வேண்டிய போதும், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை மீண்டும் சுவீகரித்து பொருத்தமான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த வேண்டும். நிலுவை வரியை அறவிட தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | செய்யாத காணிகளாக இருந்ததுடன் அக் காணிகளை மீண்டும் சுவீகரித்து வேறு முதலீட்டாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை மஹவெலி அதிகார சபைக்கு சொந்தமான விடுதி வியாபார முகாமைத்துவ அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த வாகனமொன்று காணாமல் போனதாக குறிப்பிட்டு 2021 ஜுலை 21 திகதி கொழும்பு மோசடி மற்றும் புலனாய்வு அலுவலகத்திற்கு முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. மேற்படி வாகனத்தை அனுமதியின்றி வெளித்தரப்பினருக்கு வழங்கியுள்ளதாகவும், அவ் வாகனத்தின் நிலைத்திருத்தல் தொடர்பாக வருடாந்த பண்டக கணிப்பீட்டின் மூலம் உறுதி செய்யவில்லை என குறிப்பிட்டு 2018 சனவரி 09 திகதி கணக்காய்வு ஐயவினா மூலம் அறிவித்திருந்த போதும், அது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படாததுடன், நிறுவன மட்டத்தில் எவ்வித பரிசோதனையும் மேற்கொண்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பரிசோதனை, பொலிஸ் மோசடி புலனாய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் புலனாய்வின் தற்போதைய நிலைமை தொடர்பாக அறிக்கை ஒன்றை தருமாறு கோரப்பட்டுள்ளது. | வாகன முகாமைத்துவ நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | அதிகார சபைக்கு சொந்தமான 11 நாற்று மேடைகளில் 08 நாற்று மேடைகளுமே நட்டமடைந்திருந்ததுடன், மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 35,077,470 ஆனது. | பயிரொன்றை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்யும் வரை பராமரிப்பிற்காக செலவிடப்படும் தற்போது அதிகரித்துள்ள போதும், அதற்கு சமமாக பயிர்களின் விலைகள் திருத்தப்படவில்லை. | நாற்று மேடைகளை உரிய முகாமைத்துவத்துடன் நடாத்தி இலாபம் அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | நன்நீர் மீன் உற்பத்திக்காக தேவையான மீன் குஞ்சிகளை வலயத்தினுள் உற்பத்தி செய்து கொள்வதற்கான 2019 – 2023 காலத்திற்கு உரிய ஐந்தாண்டு கால திட்டதினுள் எல் வலயத்தில் 10 நீர்தேக்கங்களில் 2021 ஆண்டினுள் 2,164,000 மீன் குஞசிகளை இட இலக்கு வைக்கப்படடிருந்த போதும் திருத்திய செயல் நடவடிக்கை திட்டத்தினூடாக 500 மெ.டொன் மீன் உற்பத்திக்கான இலக்கிற்காக 400,000 மீன் குஞ்சிகளை வெளியிடுவதற்கு ரூபா 1,300,000 ஆன ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. வருட | 2021 ஆண்டில் மஹவெலி அதிகார சபையின் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது மஹவெலி எல் வலயத்திற்காக 500 மெட்டிக் டொன் மீன் உற்பத்தி இலக்கொன்று வழங்கப்பட்டுள்ளது. வலயங்களின் நீர்தேக்கங்களில் நீர் வற்றுதல் காரணமாக தேவையான மீன் குஞ்சிகளை வழங்க தேசிய நீரியல் | வேலைத் திட்டத்தினூடாக எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதியியளவில் 60,000 மீன் குஞ்சிகள் மாத்திரம் இடப்பட்டிருந்தன. மேலும், மீன் குஞ்சிகனை கொள்வனவு செய்ய இரால் குஞ்சிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,300,000 ஆன முற்பணத்தை நீரியல் சீவராசிகள் உற்பத்தி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தியிருந்த போதும், ரூபா 300,000 முற்பணத்தை 2022 ஜுன் 20 வரையும் தீர்த்திருக்கவில்லை, எஹடுகஸ்வெவ நிறுவத் திட்டமிட்டிருந்த இனவிருத்தி மத்திய நிலையத்தின் நிர்மாண நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2021 ஆண்டில் எதிர்பார்த்த மீன் உற்பத்தி 500 மெ.டொ ஆன போதும் மீளாய்வாண்டு இறுதியில் 99.3 மெ.டொ மாத்திரமானது. | சீவராசிகள் உற்பத்தி அதிகார சபைக்கு இயலாது போனதால் 2021 ஆண்டினுள் எஞ்சிய 360,000 மீன் குஞ்சிகளை வெளியிட முடியவில்லை. எனினும் பருவகால மழையுடன் நீர்தேக்கங்கள் நிரம்பியதுடன் 2022 ஆண்டின் முதலாம் மாதத்தினுள் குறித்த மீன் குஞசிகள் இடப்பட்டுள்ளன. இரால் குஞ்சிகள் போதிய இருப்புக்கள் குறித்த நிறுவனத்தில் இல்லாத காரணத்தால் ரூபா 300,000 இற்குரிய இரால் குஞ்சிகளை எதிர்வரும் இரண்டு வாரங்களினுள் பெற்றுத் தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளன. | |
| (எ) | அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டமிடல் கருத்திட்டத்தினால் 2017 ஆண்டினுள் அதிகார சபைக்கு கிடைத்து தெஹிஅத்தகண்டிய விடுதி வியாபார முகாமைத்துவ அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த வாகனமொன்றை மஹவெலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் ஆலோசகரின் நடவடிக்கைகளுக்கு மெதிரிகிரிய வலய சாரதியொருவருக்கு வழங்கியிருந்ததுடன், 2019 திசெம்பர் 22 திகதி அவ் வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தது. நிதிப்பிரமாணம் 104(4) பிரகாரம் நட்ட இழப்பு ஏற்பட்ட திகதி முதல் 03 மாதங்களினுள் பாதிப்பு தொடர்பாக பூரணமான அறிக்கையொன்றை சமர்பிக்க வேண்டிய போதும் விபத்து தொடர்பாக பூரணமான அறிக்கையொன்றை நிதிப்பிரமாணம் 104(4) பிரகாரம் சமர்பித்திருக்கவில்லை. வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள ரூபா 6,915,484 ஆன நட்டத்திலிருந்து ரூபா 2,500,000 மாத்திரம் காப்புறுதி நிறுவனத்திலிருந்து அறவிட்டிருந்ததுடன், எஞ்சிய நட்டத்தை பொறுப்புவாய்ந்த | வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தில் காப்புறுதி நிறுவனத்தால் நிவரத்திக்கப்படாத தொகையொன்று இருப்பின் அத் தொகையை பொறுப்புதார அலுவலரினால் செலுத்த எழுத்துமூலம் விருப்பம் தெரிவித்துள்ளதால் அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாகா நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்த பொறுப்புதார தரப்பினரிடமிருந்து அதனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலரிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | அதிகார சபைக்கு சொந்தமான 43 களஞ்சியங்கள் 2009 ஆண்டு முதல் நெல் விற்பனை சபையினால் பயன்படுத்திய போதும், அக் களஞ்சியங்களிற்காக எவ்வித வாடகையையும் மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட்டிருக்கவில்லை. அக்களஞ்சியங்களை நெல் களஞ்சியப்படுத்த நியமத்திற்கமைய திருத்த வேண்டிய தேவைப்பாட்டின் மீது களஞ்சியங்களின் உரிமையை நெல் விற்பனை சபைக்கு ஒப்படைக்குமாறு நெல் விற்பனை சபையின் தலைவரினால் மஹவெலி அதிகார சபையின் பணிப்பாளரிடம் மேற்கொண்ட கோரிக்கைக்கு இணங்க குறித்த ஒப்படைப்பு நடவடிக்கையை மேற்கொள்ள அக்கட்டிடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியை மதிப்பீட்டு திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதாக கடந்த ஆண்டில் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினம் 2021 ஜுன் 20 திகதி கணக்காய்விற்கு வழங்கிய விபரங்களின் பிரகாரம் அரச காணி கட்டளைச் சட்டம் பிரகாரம் அதிகார சபைக்கு சொந்தமான காணியொன்றை இலவசமாக ஒப்படைக்க ஏற்பாடு இல்லாததால் வாடகை அறவிட அல்லது ஒப்படைப்பது தொடர்பான பிரச்சினையை இது வரை தீர்த்துக் கொள்ள முடியவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | நெல் விற்பனை சபையினால் பயன்படுத்தும் இலங்கை மஹவெலி அதிகார சபைக்கு சொந்தமான களஞ்சிய கட்டிடத்திற்காக வாடகை செலுத்தும் இயலுமை இல்லாததால், குறித்த களஞ்சியத்தை நெல் விற்பனை சபைக்கு ஒப்படைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. அரச காணி கட்டளை சட்டம் பிரகாரம் இலங்கை மஹவெலி அதிகார சபைக்கு சொந்மான காணியொன்றை அதிகார சபைக்கு ஒப்படைக்க ஏற்பாடு இல்லை. அதன் காரணமாக காணியை அரச மதிப்பீட்டின் 4 சதவீத பெறுமதியை அறவிடும் அடிப்படையில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்க அல்லது உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் வாடகை அடிப்படையில் வழங்க முடியும். இப் பிரச்சினையை வரிசை அமைச்சின் செயலாளர்களின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி முன்நடவடிக்கை பற்றி கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டுள்ளது. | களஞ்சியங்களை வினைத்திறனாக மற்றும் பயனுறுதி மிக்கதாக பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், குறித்த வாடகை தொகையை அறவிட வேண்டும் |

## 3.2 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபைக்கு சொந்தமான சுற்றுலா விடுதிகள் 27 ஆவதுடன், அந்த 27 சுற்றுலா விடுதிகளும் வருமானத்தை விஞ்சி செலவு செய்துள்ளதால் ரூபா | மஹவெலி அதிகார சபைக்கு சொந்தமான சுற்றுலா விடுதிகள் 2017 ஆண்டிற்கு முன்னர் | சுற்றுலா விடுதி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள செயற்பாடுகளை |

| | | |
|---|---|---|
| 36,385,684 ஆன நட்டமொன்றை மீளாய்வாண்டில் ஏற்படுத்தியிருந்தது. சுற்றுலா விடுதி வருமானம் குறைவடைந்து காணப்பட்ட போதிலும் 2021 ஆண்டு முதல் இதுவரை பணிப்பாளர் (பிரதான அணை மற்றும் நீர்த்தேச செயற்பாடு) அலுவலகத்தின் கீழ் காணப்படும் 05 சுற்றுலா விடுதிகளும் இணைய வசதி மூலம் ஒதுக்குவதை மற்றும் வெளி நபர்களினால் ஒதுக்குவதை நிறுத்தியிருந்ததாக அவதானிக்கப்பட்டதுடன் கடமை தேவைப்பாடுகளிற்காக சுற்றுலா பிரயாணிகளுக்கு வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக கணக்காய்விற்கு அறிவித்திருந்தது. | வருடாந்தம் ரூபா 1.5 மி ஆன சாதாரண வருமானத்தை ஈட்டியதுடன், மஹவெலி சுற்றுலா விடுதிகளை நவீனமயமாக்கி இணையப்படுத்தும் கருத்திட்டத்தினுள் சாதாரண வருமானத்தை ரூபா 10 மி விஞ்ச முடியுமாக இருந்தது.<br><br>மேலும் 2020 ஆண்டு முதல் இதுவரை நிலவும் உலக தொற்று நிலைமையினுள் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா வியாபாரம் பாரிய பின்னடைவுக்கு உட்பட்டதுடன் அந் நிலைமையினுள் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள முடியவில்லை.<br><br>அவ்வாறே மஹவெலி அதிகார சபையின் பணிப்பாளர் (பிரதான அணை மற்றும் நீர்த்தேச செயற்பாடு) கீழ் 05 சுற்றுலா விடுதிகள் காணப்படுகின்றன. அச் சுற்றுலா விடுதிகள் அணைக்கு அன்மித்து காணப்படுகின்றதால் பணிப்பாளர் (பிரதான அணை மற்றும் நீர்த்தேச செயற்பாடு) இனால் மேற்கொண்ட கோரிக்கை தொடர்பாக கடமை தேவைப்பாட்டிற்காக சுற்றுலா பயணிகளுக்கு வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. | மேற்கொள்ள வேண்டும். |

**3.3 பெறுகைகள் முகாமைத்தவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் 2021 ஆண்டு பெறுகைகள் திட்டதின் பிரகாரம் பிரதான | 2021 ஆண்டு பெறுகைகள் திட்டத்தின் | அங்கீகார பெறுகைகள் திட்டம் |

| | | |
|---|---|---|
| அலுவலகத்தினால் ரூபா 5,160,000 ஆன ஏற்பாட்டின் கீழ் Intel– 3, Inel-5, Intel -7 கணனி இயந்திரங்கள் 25 இனை கொள்வனவு செய்ய திட்டமிட்டிருந்த போதும், ரூபா 7,719,450 செலவிட்டு 54 கணனி இயந்திரங்களை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், ரூபா 7,390,000 ஆன ஏற்பாட்டின் கீழ் Inel-5, Intel -7 மடிக் கணனி 45 இனை கொள்வனவு செய்ய திட்டமிட்டிருந்த போதும் 61 மடிக் கணனிகளை ரூபா 14,690,658 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் பெறுகை திட்டத்தின் ஏற்பாட்டை விஞ்சி ரூபா 9,800,000 செலவிடப்பட்டிருந்தது. | பிரகாரம் பிரதான அலுவலகத்தின் நிலையான சொத்து கொள்வனவிற்கு வருட ஆரம்பத்தில் ரூபா 17 மி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் அடிக்கடி வருடாந்த ஆண்டு திட்டம் திருத்தப்பட்டதன் காரணமாக ரூபா 33 மில்லியன் நிதி ஏற்பாடு பிரதான அலுவலகம் மற்றும் வலய அலுவலகங்களுக்கு கோரியுள்ள டெஸ்க் டொப் கணனி மற்றும் டெப்டொப் கணனி மற்றும் அலுவலக உபகரண கொள்வனவிற்கு ஒதுக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஆண்டினுள் பெறுகைகள் திட்டம் ரூபா 17 மில்லியன் அளவிற்கு அங்கீகாரிக்கப்பட்டுள்ள போதும் திருத்திய திட்டத்தின் பிரகாரம் மேற்படி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அறவிக்கிறேன். | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், திருத்திய பெறுகைகள் திட்டத்தை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் அதிகார சபையின் உயர் முகாமைத்துவ மட்டத்தில் 34 பதவிகள் காணப்பட்டதுடன், அவற்றில் 15 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. 14 பதவிகள் பதிற் கடமை, கடமை காப்பு, ஒப்பந்த அடிப்படை மற்றும் இரட்டை அடிப்படையின் மீது கடமை மேற்கொள்வதுடன், அப் பதவிகளை நிலையாக நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், இடைநிலை முகாமைத்துவ மட்டத்தில் 79 வெற்றிடங்களும், செயற்பாட்டு முகாமைத்துவ மட்டத்தில் 730 வெற்றிடங்களும் காணப்பட்டன. அங்கீகார ஆளணியை விஞ்சி நிலையாக ஆட்சேர்க்கப்பட்ட | அமைச்சரவை செயலாளரின் “அரச செலவின மீளாய்வு” எனும் அமைச்சரவை தீர்மானத்தின் மற்றும் அது தொடர்பாக நிதி அமைச்சர் 2021 ஆகஸ்ட் 28 திகதி முன்வைத்துள்ள அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய அறிவித்துள்ள பிரகாரம் ஆட்சேர்ப்பு பிற்போடப்பட்டதன் மீது காணப்படும் வெற்றிடங்கள் நிரப்ப முடியாதுள்ளதால், பதிற் கடமை, கடமை காப்பு, | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தேவையின் பிரகாரம் திருத்தப்பட வேண்டியிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக உரிய உத்தியோகத்தர்கள் சேவையில் நியமிக்கப்பட வேண்டும். |

68 அலுவலர்களும், அங்கீகார ஆளணியினுள் உள்ளடங்காத ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்த 33 ஒருங்கிணைப்பாளர் பதவிகளும் மற்றும் ஊடக ஆலோசகர் பதவியும் உள்ளடங்களாக 102 மிகை அலுவலர்களானார்கள். அங்கீகார ஆளணியினுள் உள்ளடங்காத ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்த 33 ஒருங்கிணைப்பாளர் பதவி மற்றும் ஊடக ஆலோசகர் பதவிக்காக முறையே ரூபா 2,469,641 மற்றும் ரூபா 832,792 சம்பளம் மற்றும் படிகளாக மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்தன.

ஒப்பந்த கடமை அளிப்பு அடிப்படையின் மீது மற்றும் இரட்டை அடிப்படையில் கடமை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய ஆட்சேர்ப்பு திட்டத்தின் மீது பதவிகள் குறைவடைந்ததால் ஊழியர் மிகை ஏற்பட்டுள்ளது.

மேலும் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம். 25/2014 மற்றும் 25/2014(i) பிரகாரம் தொடர்ச்சியாக 180 நாட்கள் திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

மஹவெலி விவசாயிகளின் விவசாய மற்றும் கால்நடை கட்டுப்பாடு சம்பந்தமான தொழிநுட்ப அறிவை மேம்படுத்துவதன் மூலம், பல்கலைக்கழக அறிவை விவசாயிகளுக்கு நேரடியாக கொண்டு செல்ல ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை பிரிவு மட்டத்தில் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மூலம் ஒருங்கிணைப்பாளர் பதவிகளிற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டன.

ஊடக களத்தில் அனுபவம் மற்றும் அறிவுமிக்க அலுவலளர் ஒருவரை ''ஊடக ஆலோசகர்'' பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது ஆட்சேர்க்கப்பட்டுள்ளார்.